**செய்திவெளியீடு எண்.25/2018** **நாள் 21.05.2018**

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்**

**அறிவிப்பு**

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் குடிநீர் அல்லாத பிற தேவைகளான தோட்டத்திற்கு, கழிவறைக்கு மற்றும் தொழிற்சாலை பயன்பாட்டிற்கு தேவைப்படும் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை தட்டுப்பாடின்றி வழங்கக் குடிநீர் வாரியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தேவைகளுக்காக இரண்டாம் நிலை சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை வாரியத்தின் கொடுங்கையூர், கோயம்பேடு, நெசப்பாக்கம் மற்றும் பெருங்குடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து பெற ஆயிரம் லிட்டருக்கு ரூ.18.40 என விலை நிர்ணயம் செய்துள்ளது.

விருப்பமுள்ள நபர்கள், குடிநீர் அல்லாத பிற பயன்பாடுகளுக்கு தேவைபடும் இரண்டாம் நிலை சுத்திகரிக்கப் பட்ட கழிவு நீர் பற்றி மேலும் விவரங்கள் அறிய கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

| இருப்பிடம் | தொடர்பு கொள்ள வேண்டிய நபர் | தொடர்பு எண் |
|---|---|---|
| கொடுங்கையூர் | செயற் பொறியாளர்<br>கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்/ வடக்கு | 81449 30800 |
| கோயம்பேடு | | |
| நெசப்பாக்கம் | செயற் பொறியாளர்<br>கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்/ தெற்கு | 81449 30600 |
| பெருங்குடி | | |

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்